புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# சாம்பல் மேடு நாவலில் மனித உறவுமுறைகள்

முனைவர் இல. பூர்ணிமா ஜோதி,
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5.

ஆய்வுச் சுருக்கம்

உறவுகளுக்குத் தமிழர்கள் முதலிடம் வழங்கி வந்தனர். வாழ்வில் முக்கியமான அமைப்பு முறை உறவு முறைகளாகும். கடவுளுக்கும் உறவுமுறை முதன்மையானது என்பதை தமிழர்களின் பண்பாடு உணர்த்துகிறது. மனித உயிர்கள் அனைத்திலும் உயர்ந்த பெறுவது உறவுகளேயாகும். சமுதாயத்தில் குடும்பம் ஒரு அங்கமாக திகழ்கின்றது. குடும்பத்திலிருந்து தான் உறவுமுறைகள் வரையறுக்கப்படுகின்றன. உறவுமுறை அமைப்பில் குடும்ப அமைப்பும் குல அமைப்பும் இடத்தைப் பெற்று திகழ்கின்றது. சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பாடு பொருள்களாக மனித உறவுகள் முதலிடம் பெறுகின்றது. சமுதாயத்தில் உறவு செம்மையாக இருத்தல் வேண்டும். பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கிய அமைப்பு முறையே சமுதாயமாகும். மனித உறவுகள் செம்மையாக இருந்தால்தான் வெற்றிலை அடைய முடியும். ஒருவரை யொருவர் விட்டுக் கொடுத்து அன்பாக வாழ்கின்ற உறவு முறையே அன்பு உறவுகள் ஆகும். சாம்பல் மேடு புதினத்தில் ஒரே குடும்பத்தில் சேர்ந்தவர்களிடம் மட்டுமே பெரும்பாலும் அன்புறவுகள் காணப்படுகின்றது.

குறிப்புச் சொற்கள்

தமிழர்கள் - உறவுகள் - குடும்பம்- சமுதாயம் - கடவுள்.

## முன்னுரை

உறவுகளுக்குத் தலைமையிடம் தந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். மனித வாழ்வின் உன்னத அமைப்பு முறையே உறவுகளாகும்.உறவுகள் இல்லாமல் மனிதர்களின் வாழ்க்கை நிலைத்திருக்க முடியாது. மனிதர்களுக்கும் மட்டுமல்லாமல் கடவுளுக்கும் உறவுமுறைகள் முதலிடம் பெற்றுத் திகழ்வது தமிழர்களின் பண்பாட்டுக்கும் சிறந்ததொன்றாகும்.கடவுளுக்கும் உறவுநிலைகளைக் காட்டி வழிபட்டவர்கள் தமிழர்கள். தமிழர்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்வது உறவுமுறையேயாகும். மனித உயிர்கள் அனைத்திலும் உயிர் போல அமைந்து விளங்குவது உறவுமுறைகளாகும். இத்தகைய தமிழர்கள் போற்றி வளர்த்த உறவுமுறைகள் நாவலில் இடம்பெற்றுள்ளமையை ஆராயப்படுகின்றன.

## உறவுமுறைகள்

சமுதாயத்தில் ஒரு அங்கமாகத் திகழ்வது குடும்பமாகும். குடும்பத்தில் இருந்து தான் உறவுமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. குடும்பம் என்ற அமைப்பிற்கு உறவுமுறைகள் இன்றிமையாததாகத் திகழ்கின்றது. உறவுமுறை அமைப்பில் குடும்ப அமைப்பும், குல அமைப்பும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பாடு பொருளாக மனித உணர்வு மனித வாழ்வு மனித உறவு ஆகிய மூன்றும் முதலிடம் பெற்று திகழ்கின்றது சமூகக் கட்டுக்கோப்பிற்குக் குடும்ப உறவு மிகவும் செம்மையாக இருக்க வேண்டும். சமுதாயம் என்பது பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு அமைப்பு ஆகும் இவ் அமைப்பில் முதலிடம் பெறுவது குடும்பமே ஆகும்.

*மனித உறவுகள் சிறப்பான முறையில் அமைந்தால் வெற்றிகளை அடைவது இயல்பு. கணவன் மனைவி உறவு தாய் மகன் உறவு தாய் மகள் உறவு பாட்டி பேரல் உறவு பல உறவுகளை உள்ளடக்கியதே குடும்பமாகும்*

*"சமுதாயத்தின் மிகச்சிறந்த அலகாக விளங்கும் தனிக்குடும்பத்தில் தொடங்கும் உறவுமுறை அந்தந்த சமுதாய அமைப்பிற்கு ஏற்ப பல நிலைகளில் விரிவு பெறுகின்றது"( சீ.பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 418)*

*உறவு முறையின் அனைத்து அடிப்படையில் இயல்புகளும் சிறப்புப் பண்புகளும் தனி குடும்பம் என்கிற நிலையில் தான் இடம்பெற்று திகழ்கின்றன. "உறவு நிலைகளை இலக்கியத்தில் படைப்பது இன்று பெரிய வருகிறது. தமிழ்ப்புனைக் கதைகளிலும் நாவல்களிலும் காணப்படும் குடும்பங்களை நடப்பியலுக்கு அப்பாற்பட்ட கற்பனைக் குடும்பங்கள் என்று ஒதுக்குவதில்லை" என்று லாரன்சு அவர்கள் குறிப்பிடுகின்றார். (பாக்கியமுத்து, (ப.ஆ), தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம்,ப.129)*

*ஆணும் பெண்ணும் மணமுடித்துக் கொள்ளுதல் மண உறவாகவும், கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் பிறக்கின்ற குழந்தைகள் இரத்த உறவாகவும் குடும்ப உறவுகள் அமைந்துள்ளமையை காண முடிகின்றது.*

*அன்பு உறவுகள்*

*சாம்பல் மேடு எனும் புதினத்தில் அன்பு உறவுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் மட்டுமே பெரும்பாலும் அன்பு உறவுகள் நிலவி வருவதைக் காண முடிகின்றது.*

*1.கணவன் மனைவி உறவுகள்*
*2. தந்தை மகன் உறவுகள்*
*3.தந்தை மகள் உறவுகள்*
*4.தாய் மகன் உறவுகள்*
*5.தாய் மகள் உறவுகள்*
*6. அண்ணன் தம்பி உறவுகள்*
*7. அண்ணன் தங்கை உறவுகள்*
*8. அக்காள் தங்கை உறவுகள்*
*9. தாத்தா பாட்டி உறவுகள்*
*10. மாமா அக்காள் உறவுகள் ஆகியோர் நாவலில் அன்பு உறவுகளாக நாவலாசிரியரால் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.*

*கணவன் மனைவி உறவுகள்*

*குடும்பம் என்ற அமைப்பில் கணவனும் மனைவியும் தலைமை வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர். உறவுகளின் அடிப்படையில் குடும்பத்தின் தன்மை செயல்பாடுகள் ஆகியன அமைந்துள்ளன. குடும்பத்தில் தலைவன் தலைவியாக இருக்கக்கூடிய கணவனும் மனைவியும் ஒத்த மனம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். குடும்ப அமைப்பில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் சமமாகவும் விட்டுக்கொடுத்தும் புரிந்து கொள்ளும் மனப்பான்மை இருத்தல் அவசியம்.*

*கணவன் மனைவி இருவரின் மனமும் ஒன்றுபட்டு இணைந்து வாழ்ந்தால் அதுவே சிறந்த அறமாகும் என்கிறார் வள்ளுவர்*

*"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன் பழிப்பது இல்லாயின் நன்று"( குறள். 49)*

*என்று குறிப்பிடுகின்றார்.*

*அன்பு உறவுகள்*

*கணவன் மனைவி என்று இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து அன்பாக வாழ்கின்ற உறவு முறையே அன்பு உறவுகள் ஆகும்.*

*" அன்பும் அறனும் உடைத்தாயின் என் வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"( திருக்குறள், குறள் எண், 45) .*

*தெய்வசிகாமணி- பொன்னி*

*இந்நாவலில் இருவரும் அன்பு உறவுகளாகத் திகழ்கின்றனர். இவருக்கு தண்டபாணி என்ற தம்பியும் தங்கமணி என்ற தங்கையும் இருப்பதாக நாவலாசிரியர் கூறியுள்ளார். தெய்வசிகாமணியின் மனைவியான பொன்னி என்ற கதாபாத்திரம் வீட்டில் வேலை பார்ப்பவனாகத் திகழ்கின்றான் தெய்வசிகாமணி ஆழ்துளைக் கிணறு குறி பார்த்துச் சொல்வதில் சிறந்தவர். தன் தங்கையான தங்கமணி மீது மிகுதியான அன்பு வைத்திருப்பவர்.*

*" தெய்வசிகாமணிக்கு இளகின மனசு. எத்தனையோ ஜோலிகள் இருந்தாலும் யாராவது ஒருவர் தன்னிடம் வந்து ஏதாவது உதவி என்று கேட்டால் அந்த சொந்த ஜோடிகளை எல்லாம் நிறுத்திவிட்டு அல்லது தள்ளி வைத்துவிட்டு அந்த உதவியைச் செய்ய சென்று விடுவார்" என்று நாவல் ஆசிரியர் கூறியுள்ளார். ( மா. நடராசன், சாம்பல் மேடு, பக்.5-6) இதன் மூலம் உதவி என்று வந்துவிட்டால் அனைவருக்கும் உதவி செய்யும் இயல்பான மனம் படைத்தவர் என்பதனை அறிய முடிகின்றது.*

*தண்டபாணி- சாந்தாமணி*

*தெய்வசிகாமணியின் தம்பியாகத் திகழ்பவர்.தம்பியின் மனைவி சாந்தாமணி என்ற கதாபாத்திரம் அமைதியாக பேசும் இயல்புடையவர். வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பவள். இவரும் தமது தங்கையான தங்கமணியின் மீது அளவு கடந்த பாசத்தைக் காட்டுபவர். இவர்களுக்கு திருமண வயதில் தாமரை என்ற பெயரில் மகள் இருக்கிறாள்.*

*தண்டபாணியின் மனைவியைப் பற்றி குறிப்பிடும் நாவலாசிரியர், " தம்பி தண்டபாணியின் மனைவியோ எப்போதும் யாரையுமே எடுத்து எறிந்து பேசுவதில் சுபாவம் கொண்டவள். மனதுக்குள் மின்னல் போல வரும் கருத்தைச் சொல்லலாமா சொல்லக்கூடாதா என்றெல்லாம் சிந்திக்கவே முடியாதவள்"( மேலது, ப. 7) என்று கூறுகின்றாள். இதிலிருந்து சாந்தாமணியின் குண நலன்களை அறிய முடிகின்றது.*

*பொன்னப்பக் கவுண்டர் -தெய்வாத்தாள்*

*தெய்வசிகாமணி தண்டபாணி தங்கமணி மூவருக்கும் தாய் தந்தையாகத் திகழ்கின்றனர். பெண் பிள்ளையான தங்கமணி பிறந்த பிறந்தநாள் இரண்டாம் நாள் தெய்வாத்தாள் இறந்துவிடுகின்றாள். கடும் உழைப்பாளியாக பொன்னப்பக் கவுண்டர் திகழ்கின்றார். மனைவி இறந்த பிறகு மிகுதியாக வருத்தப்பட்டவர். “தெய்வசிகாமணியின் தந்தை பொன்னப்பக்கவுண்டர் வெள்ளைத் துண்டு ஒன்றை எடுத்துக் கொண்டு தலையின் மேல் போட்டுக் கொண்டு இருந்தார் “(மேலது, ப. 8) என்று நாவலாசிரியர் கூறியுள்ளார்.*

*சாமிநாதன் – சாமியாத்தாள்*

*தெய்வாத்தாள் தங்கை சாமியாத்தாள். தங்கமணியை வளர்க்க பெரும் உதவியாக இருந்தவள். தெய்வாத்தாளின் இறப்பிற்கு பிறகு வீட்டுக்குத் திரும்பும் பொழுது இரவு பொழுது ஆகிவிடுகிறது. பொன்னப்பக் கவுண்டருக்கு சகலன் கொழுந்தியா முறையாக அமைந்துள்ள கதாபாத்திரமாகும். சாமிநாதனின் அம்மா கன்னியாத்தாள். தெய்வாத்தாளின் இறப்பிற்கு பிறகு இரண்டு நாள் குழந்தையாக இருந்த தங்கமணியை சீரோடும் சிறப்போடும் வளர்த்தவள். சாமியாத்தாளின் வாழ்க்கையில் துன்பங்கள் வந்த போதும் தங்கமணியை வளர்ப்பதில் உறுதுணையாக இருந்தவர். " செஞ்சேரி வீட்டுக்கு சாமிநாதனும் சாமியாத்தாளும் வந்து சேரும்போது குழந்தை சிவகாமி அழுகும் குரல் கேட்டது .திடுக்கிட்டுப் போனாள் சாமியாத்தா"(மேலது, ப. 8) என்று கூறுவதில் இருந்து சாமிநாதன் தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை இருப்பதாக நாவலில் சுட்டிக்காட்டி உள்ளார் நாவல் ஆசிரியர்.*

*பத்திரான்- கருப்பாள்*

*கீழ்க்குடியை சேர்ந்தவர்கள். இவர்களின் மகன் சுப்ரமணியன். கல்லூரியில் படிக்கும் மாணவனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். போராட்டம் மேற்கொள்ள உறுதியாக இருந்தவள்.. பண்ணையத்தில் வேலை பார்ப்பவன். " சுப்ரமணியன் தடுமாறுவதாக அடுப்படிக்கருகில் மனைவி கருப்பாளோடு பேசிக் கொண்டு இருந்த பத்திரான் புரிந்து கொண்டான்"*

*(மேலது,ப.143)என்று கூறுவதில் இருந்து பத்திரானின் மனைவி கருப்பாள் என்பதை உன்னால் முடிகிறது.*

*மருதுக்குட்டி- ஆறாத்தாள்*

*இவர் வேலாம்பாளையத்தில் அம்பேத்கர் விடுதலை முன்னணி இயக்கத்தை ஆரம்பித்தவர். அதன் அமைப்பின் தலைவர். போராட்டத்திற்காக பெரும்பங்கு வகிப்பவர். " மருதுக்குட்டி ஊர்ல தான் இருக்கிறானா? எப்ப பார்த்தாலும் பஸ் ஏறி போயிட்டே இருக்கிறியே உன்ற ஊட்டுக்காரியும் அப்பனும் ஆத்தாளும் இல்லீன்னா, எப்பிடியப்பா குடும்பம் நடத்தறது? புள்ளைக வேற படிக்குதாமா? ஹைஸ்கூல்ல சேர்த்தி உட்டுட்டியாமா?உன்ற ஊட்டுக்காரி ஆறாத்தாள் நேத்து முந்தா நேத்தோ வந்து டீ குடிச்சிட்டு என் கூட சித்தங்கூரம் குச்சிட்டுப் பாடுபழமை பேசிட்டு தான் போனாள்"( மேலது, ப. 166) என்று கூறுவதில் இருந்து மருதுக் குட்டியின் மனைவி ஆறாத்தாள் என்பதையும், அவர்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்புள்ள தாயாக திகழ்கின்றாள்.*

*ரங்கமுத்து அய்யன்- தங்காத்தாள்*

*தெய்வசிகாமணி, தண்டபாணி இன்று இருவருக்கும் அப்பத்தாள் தங்கத்தாள். இவர்களை பெரியம்மா என்று அழைக்கும் முறை நாவலில் காணமுடிகிறது. வயது முதிர்வின் காலத்திலும் கூட ஆத்தா என்றோ பாட்டி என்றோ அழைக்கும் முறை நாவலில் இடம் பெறவில்லை. அப்பத்தாவை அப்பிச்சி என்றும் பெரியம்மா என்றும் அழைப்பதுண்டு.*

*தந்தை -மகன் உறவுகள்*

*மணமான ஒரு ஆடவன் குழந்தை பெறும்போது தந்தை என்றும் அந்தக் குழந்தை ஆணாக இருந்தால் அவன் மகன் என்றும் அழைக்கப்படுகின்றான்.*

*பொன்னப்பக் கவுண்டர்- தெய்வசிகாமணி, தண்டபாணி*

*பொன்னப்ப கவுண்டருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் தெய்வசிகாமணி. இளையவன் தண்டபாணி. சிறந்த உழைப்பாளி. மனைவி தெய்வாத்தாள் இறந்ததும் மறுமணம் செய்து கொள்ளாதவர்.*

*தெய்வசிகாமணி- திருமலைசாமி*

*தெய்வசிகாமணிக்கும் பொன்னிக்கும் பிறந்தவன். தந்தைக்கு மிகுதியான மதிப்பு தருபவன். கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவன் தனது அத்தையான தங்கமணியின் மகளான சுகந்தியின் நகை திருட்டுப் போனது எண்ணி வருத்தப்பட்டவன். போராட்டத்தில் கலந்து கொள்பவன்.*

*தந்தை மகள் உறவுகள்*

*கணவன் மனைவிக்கு பெண் குழந்தைகள் பிறந்தால் அந்தக் குழந்தை இருவருக்கும் மகள் என்று அழைக்கப்படுகின்றாள்.*

*தண்டபாணி - தாமரை*

*தாமரை மீது அதிகமான அன்பு வைத்திருப்பவர்" தண்டபாணி மகள் பெண் பார்க்க வேலாம்பாளையத்தில் இருந்து வந்திருந்தனர்" (மேலது,ப.4)என்று கூறுவதில் இருந்து தண்டபாணியின் மகள் திருமண வயதில் இருக்கும் பெண்ணாக நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.*

*தங்கமுத்து -சுகந்தி*

*தங்கமுத்துவின் ஒரே மகள் சுகந்தி. கல்லூரியில் படிப்பவள். தனது மாமாவான தெய்வசிகாமணியின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருப்பவள். போராட்டத்தில் கலந்து கொள்பவள்.*

*தாய்- மகன் உறவு*

*மணமான ஆடவன் குழந்தை பெற்று தந்தையாவது போல மணமான பெண் குழந்தை பெற்றதும் தாய் என்று அழைக்கப்படுகிறாள்.*

*தெய்வசிகாமணி- தெய்வாத்தாள்*

*தெய்வாத்தாளின் தலைமகன் தெய்வசிகாமணி. உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருப்பவன். மூத்த மகன் மீது அதிகமான பாசத்தினை வைத்திருப்பவர். பள்ளியில் படிக்கின்ற போது உணவினை எடுத்துக்கொண்டு தந்தவர்.*

*தாய் -மகள் உறவு*

*தாய் மகள் உறவு புனிதமானது. யாராலும் பிரிக்க இயலாது. தாய்க்கும் தந்தைக்கும் பிறந்த பெண் குழந்தையை மகள் என்ற உறவு முறையால் கூறி அழைப்பது வழக்கமாக இருந்து வருகிறது*

*தங்கமணி- சுகந்தி*

*தங்கமணியின் மகள் சுகந்தி. கல்லூரியில் படிக்கும் பெண்ணாகத் திகழ்கின்றாள். பத்திரான் மகன் சுப்ரமணியனுடனே கல்லூரிக்கு செல்பவள். ஒரு நாள் சுகந்தி கல்லூரியிலிருந்து தாமதமாக வந்த பொழுது கழுத்தில் அணிந்திருந்த நகையை திருடர்கள் பறித்து சென்று விடுகின்றனர், அப்பொழுது சுகந்திக்கு சுப்பிரமணியன் உதவி செய்கிறான். சுகந்திக்கு உதவி செய்ததால் சுப்பிரமணியனை திருடர்கள் அடித்து விடுகின்றனர். ஆதலால் சுகந்தி வருத்தப்படுகின்றாள். தன்னுடைய தாயான தங்கமணியிடம் சுகந்தி எதையும் மறைக்காமல் சொல்லக்கூடியவள். " சுகந்தி தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் வகுப்பில் ஆகட்டும் வெளியில் ஆகட்டும் பஸ்ஸில் ஆகட்டும் எதுவாக இருந்தாலும் இரவு வந்து அம்மாவிடம் சொல்லாமல் இருக்க மாட்டாள்"( மேலது ப. 104) என்று நாவல் ஆசிரியர் சுகந்தியை உயர்வாக கூறியுள்ளார். இதன் மூலம் இன்றைய குழந்தைகள் தாயிடம் உண்மையாக இருக்க வேண்டும் என்பதை நாவலாசிரியர் எடுத்துக்காட்டி உள்ளார்.*

*அண்ணன்- தம்பி உறவுகள்*

*உடன் பிறந்த ஆண்களில் தனக்கு முன்னாள் பிறந்த உன்னை என் அண்ணன் என்றும் தனக்கு பின்னால் பிறந்தவனை தம்பி என்று வழக்கங்கள் காணப்படுகின்றன*

*தெய்வசிகாமணி -தண்டபாணி*

*பொன்னப்பக் கவுண்டருக்கும் தெய்வத்தாளுக்கும் பிறந்தவர்கள். மூத்தவன் தெய்வசிகாமணி. இளையவன் தண்டபாணி. அண்ணன் தம்பி உறவுக்கு பாலமாக இருப்பவர்கள்.*

*அண்ணன்- தங்கை உறவுகள்*

*தாய்க்கு முதலில் பிறந்தவனை அண்ணன் என்றும் இரண்டாவது பெண் குழந்தை பிறந்தால் தங்கை என்றும் கூறுவது மரபாக கருதப்படுகிறது.*

*பொன்னப்பக் கவுண்டர்- வள்ளியாத்தாள்*

*இவர் தங்கையின் மீது அளவு கடந்த பாசத்தை வைத்து இருப்பவர். " வள்ளியாத்தாள் சமையல் வீடாகிய கைசாளைக்குள் சென்று தண்ணீர்ப் போசியில் தண்ணீர் கொண்டு வந்தாள்"( மேலது, ப. 20) என்று கூறுவதில் இருந்து பொன்னப்பக் கவுண்டரின் தங்கை வள்ளியாத்தாள் என்று நாவலாசிரியர் கூறியுள்ளார்.*

*நித்தியானந்தன் -சரசாள்*

*ஒரு அத்தியாயத்தில் மட்டும் பேசப்படும் கதாபாத்திரம். சரசாளின் காதலுக்கு உறுதுணையாக இருந்தவன். தனது தங்கை பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது கணக்கு வாத்தியார் சரசாள் தூங்கிக் கொண்டிருந்தவனை அறிந்து அவளை அடித்து விடுகின்றார். ஆதலால் சரசால் அழுகின்றாள். அதனைப் பார்க்க முடியாமல் கணக்கு வாத்தியாரின் மூக்கினை உடைத்து விடுகிறான் நித்தியானந்தன். அன்றிலிருந்து தங்கையின் படிப்பு நிறுத்தப்படுகிறது.*

*" தங்கச்சி படிப்பு நின்ன பொறகு நானு மட்டும் படிச்சு என்ன ஆகப்போகுது போங்க என்று சரசாளிடம் ஒரு நாள் சொல்லிவிட்டு அவனும் பள்ளிக்குச் செல்லவில்லை"( மேலது, ப. 52)*

என்பதிலிருந்து அண்ணனும் தங்கையும் பள்ளிக்கு ஒரே நேரத்தில் செல்லாமல் படிப்பை நிறுத்தி விடுகின்றனர் என்பதனை அறிய முடிகின்றது.

தெய்வசிகாமணி தண்டபாணி- தங்கமணி

நாவல் முழுவதும் ஒரே கதாபாத்திரமாக திகழ்பவள் தங்கமணி. தங்கமணி தாயை இழந்து அண்ணன்களின் அரவணைப்பில் வளர்ந்தவள். இவள் கல்லூரி படிப்பு வரை படித்தவள். திருமண வயது வந்த பிறகு தங்க முத்துக்கு மணம் முடித்துக் கொடுத்தவர். தங்கையின் மகளான சுகந்தி மீது பாசத்தையும் அவளுக்கு தேவையான நகைகள் மற்றும் உடைகளை வாங்கி தருபவர். அண்ணன் தெய்வசிகாமணிக்கு உடல்நிலை சரியில்லாத பொழுது இரவு என்று பாராமல் கூட உடலில் இருந்து கவனித்துக் கொண்டவள் தங்கமணி. தங்கமணி வாழ்வதற்கு வாழ்வாதாரமாக போர்வெல் போட்டு தென்னை மரங்களை வைத்து கொடுத்தவர். எல்லா நேரங்களிலும் உறுதுணையாக இருந்தவர் அண்ணன் தெய்வசிகாமணி.

தாத்தா -பாட்டி உறவுகள்

அங்கப்பன் -அங்காத்தாள்

தெய்வசிகாமணி தண்டபாணி தங்கமணி ஆகியோருக்கும் அப்பிச்சி அப்பத்தா என்ற முறையில் தாத்தா பாட்டிகளாக நாவலில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பேரன் பேத்தி மீது மிகுதியான அன்பு வைத்திருப்பவர்கள். மகள் தெய்வாத்தாள் இறந்ததற்கு வருத்தப்பட்டவர்கள்.

ரங்க முத்து அய்யன்- தங்காத்தாள்

இவர்களும் தாத்தா பாட்டி உறவுகளில் இடம் பெறுவர். தாத்தா ரங்க முத்து அய்யன் இறந்த பிறகு தங்கத்தாள் மகன் வீடான பொன்னப்பக் கவுண்டரின் வீட்டில் தங்கி விடுகின்றாள். மருமகளின் இறப்பிற்கு பிறகு தெய்வசிகாமணி தண்டபாணி தங்கமணி ஆகிய மூவரையும் சாமியாத்தாளின் உதவியுடன் அன்போடும் அரவணைப்போடும் வளர்த்த சிறப்பிற்கு உரியவர்கள். இவர்கள் மூவரும் தங்கத்தாளை பெரியம்மா என்று அழைப்பதுண்டு. " "தங்காத்தா அடுப்படியில் என்னவோ செய்து கொண்டிருந்தாள்" ( மேலது, ப. 41) என்று கூறுவதில் இருந்து வீட்டு வேலைகளை செய்து கொண்டு இருப்பவள் என்பது தெளிவாகிறது.

அப்பத்தா தங்காத்தாளுக்கு உடல்நிலை சரியில்லாத பொழுது தெய்வத்தாளின் தங்கை சாமியாத்தாள் அனைத்து வேலைகளையும் கவனித்துக் கொள்கின்றாள். தெய்வாத்தாளின் குழந்தையைச் சாமியாத்தாள் பராமரிக்க வந்த இடத்தில் குடும்பம் முழுவதையும் பராமரிக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றாள்.

அக்காள் தங்கை உறவுகள்

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி என்று இருவருக்கும் முதலில் பெண் குழந்தை பிறந்தவுடன் அதற்கடுத்த குழந்தை பெண்ணாகப் பிறந்தால் அந்த இளையவள் மூத்தவளை அக்காள் என்று அழைக்கின்றாள்.

தெய்வாத்தாள்- சாமியாத்தாள்

அங்கப்பன் அங்காத்தாள் இருவருக்கும் மகள்களாக பிறந்தவர்கள். தெய்வாத்தாள் இறந்த பிறகு இரண்டு நாள் குழந்தையான தங்கமணியை பெற்ற குழந்தையைப் போல பராமரிப்பு செய்தவள். குழந்தை வளர்ப்பில் மிகப்பெரிய பங்கு சாமியாத்தாள் அவர்களுக்கே சார்ந்தது. ஏனென்றால் தன்னுடைய குழந்தையை போல தங்கமணியை வளர்த்துள்ளாள் சாமியாத்தாள்.

ரங்காத்தாள்- செல்லாத்தாள்

ராமர் லட்சுமணரின் மனைவியராகச் சித்தரிக்கப்படுபவர்கள். இவர்கள் இருவரும் அண்ணன் தம்பிகளை மணமுடித்துக் கொண்டவர்கள். கணவன் சொல் கேளாமல் நடப்பவர்கள். இவர்களுடைய கணவர்கள் மருந்து குடித்து இறந்து விடுவதற்கு காரணமாக இருந்தவர்கள்.

*மாமா -அக்காள் உறவு*

*கணபதி -கமலா*

*தங்கமணியின் மாமன் அக்காளாகத் திகழ்பவர். தங்கமணி திருமண வயது வந்ததற்கு பிறகு மாப்பிள்ளை பார்க்க செல்லும் கதாபாத்திரமாக நாவலில் இடம்பெற்றுள்ளனர்.*

*முடிவுரை*

*குடும்பம் என்ற அமைப்பிலிருந்து தான் உறவு முறைகள் தோற்றம் பெற்று வாழ்ந்து வந்திருக்கின்றன. குடும்ப உறவுகளின் தன்மைகளுக்கு ஏற்பவே குடும்பம் அமைந்துள்ளது. குடும்பம் என்ற அமைப்பில் இரத்த உறவு, மண உறவு என்ற உறவு முறைகள் காணக் கிடக்கின்றன. குடும்பம் என்ற அமைப்பில் உறவு முறைகள் முதலிடம் பெற்று திகழ்கின்றது. நாவல் முழுவதிலும் அன்பை மட்டுமே பொழியும் அன்பு உறவுகள் இடம் பெற்றுள்ளன. இந்த நாவலில் அண்ணன் தங்கை பாசம் அளவிடகரியது. சாமியாத்தாள் என்ற கதாபாத்திரம் தனது அக்காளின் இறப்பிற்கு பிறகு தங்கமணி என்ற குழந்தையை வளர்க்கும் தியாகச் செம்மலாக உருவாக்கப்படுத்தப்படுகிறாள். பெண்கல்வி முதன்மையானது என்பதை தங்கமணி சுகந்தி என்ற இரண்டு கதாபாத்திரங்களின் மூலம் உணர முடிகின்றது. சுகந்தி என்ற கதாபாத்திரம் தாயிடம் எல்லாவற்றையும் கூறும் இயல்பான கதாபாத்திரமாகும். சாம்பல் மேடு என்னும் நாவலில் அன்பு உறவுகளே முதலிடம் பெற்று திகழ்கின்றது.*

*பார்வை நூல்கள்*


*1. சாம்பல் மேடு, நடராசன், 2020.*

*2. பண்பாட்டு மானிடவியல், பக்தவச்சல பாரதி, 1990.*

*3. தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம், பாக்கியமுத்து, 1997.*

*4. திருக்குறள், பெரியண்ணன், 2021.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********